***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*

**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p12-23** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# நற்றிணை நயம்

## *(Natrinai Nayam: An Aesthetic Study of the Emotional, Natural and Ecological Craftsmanship in Natrinai)*

**தமிழரசி .க,**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*ஆர்.வி.எஸ். தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் – 641401.*

**Tamilarasi K*,**
*Asssistant Professor, Department Of Tamil,*
*Rvs Institute Of Technology, Coimbatore 641401.*
*Email: mithutamil2008@gmail.com* ***ORCiD:*** *0009-0000-2280-4526.*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
*mithutamil2008@gmail.com*

**Abstract:** As a key work within Sangam literature's Eight Anthologies, Natrinai offers a profound window into ancient Tamil society by capturing the intimate world of human love and emotion across its 400 akam poems. Anchored in Tolkappiyam poetic conventions—such as ullurai uvamam (implicit similes) and the foundational elements of muthal, karu, and uri—the text uses Tamil literature's five distinct landscapes (Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai) not merely as backdrops, but as vital symbols to express union, separation, longing, and anxiety. Through the distinct perspectives of the hero, heroine, friend, and mother figures, Natrinai masterfully integrates nature and social relationships, demonstrating how concise imagery and ecological consciousness can convey complex psychological and cultural experiences.

**Keywords:** *Natrinai, Sangam literature, Akapporul, Tinai, Ullurai uvamam, Mozhi nayam, Panpattu nayam, Tamil aesthetics, Ettuthokai.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.02**

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்க இலக்கியங்கள், தமிழக மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, கலாச்சாரம், காதல், வீரம்,இயற்கை சார்ந்த வாழ்வியல் போன்றவற்றை வெளிப்படுத்தும் சிறப்புமிக்க இலக்கிய பொக்கிஷம் ஆகும். செந்தமிழ் புலவர்களால் இயற்றப்பட்டு கற்றறிந்த சான்றோர்களால் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை நூல்களில் முதல் நூலாக அமைவது நற்றினை. நற்றிணை என்பது "நல்லொழுக்கம்"என்று கூறப்படுகிறது. இது "நற்றிணை நானூறு" , "தூதின் வழிகாட்டி" என்று அழைக்கப்படுகிறது. இது அன்பின் ஐந்து திணைகளை பற்றி கூறக்கூடிய அகப்பொருளாகும். இது "நல்" என்று அடைமொழியுடன் கூறக்கூடிய ஒரேநூல். உயர்ந்த ஒழுக்க நெறியை குறிப்பிட்டு சொல்லும்படியாக அமைந்த சிறந்தநூல். நற்றிணை பாடல்களில் காணப்படும் இயற்கைகாட்சிகள், வர்ணனைகளாக அமைகின்றன .மனித உள்ளத்தில் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொருளாக அமைகிறது நற்றினை.மழை, காடு,வயல், கடல், பாலைநிலம், மலர்கள், பறவைகள், விலங்குகள் போன்ற இயற்கை கூறுகள் காதல் உணர்வோடு நெருங்கிய தொடர்பை பெற்றுள்ளன. மேலும் இவை தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ,நற்றாய் போன்ற பாத்திரங்களின் வாயிலாக சமூக அமைப்பை வெளிப்படுத்துகிறது .

எட்டுத்தொகை நூல்களுள் பழைய வெண்பாவின்படி முதலிடம் பெறும் நூலாக விளங்குவதுநற்றிணைஆகும். இந்நூல் முழுவதும் அகப்பொருள் பாடல்களை மட்டுமே கொண்டிருப்பது இதன் தனிச்சிறப்பாகும். பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதியின் ஆதரவில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் இந்நூலில், திருமாலை வாழ்த்தும் கடவுள்வாழ்த்தோடு, ஒன்பது முதல் பன்னிரண்டு அடிகள் வரையிலான 401 பாடல்கள் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன. இவ்வாய்வு, நற்றிணையின் இலக்கியநயத்தை மூன்று நிலைகளில் ஆராய முற்படுகிறது: தலைவி-தலைவனின்கலவி, பிரிவுநிலைகளில் வெளிப்படும் உணர்வுநிலைகளின் உளவியல் ஆழம், தொல்காப்பியர் குறிப்பிடும் முதல்கரு. உரிப்பொருள் என்னும் மரபின் அடிப்படையில் அமையும் உள்ளுறை உவமங்களின் அழகியல் வலிமை ,மற்றும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைச் சூழலியல் ஒவ்வொரு பாடலின் உணர்வோடும் பின்னணியாக மட்டுமல்லாமல் ஒன்றிணைந்து இயங்கும் விதம். நற்றிணை தன்னைத் தானே "தூதின்வழிகாட்டி" எனக் குறிப்பிடும் பாங்கில் , ஒரு முழு உணர்வுக் கதையையும் ஒரு சிறு இயற்கை வருணனையினுள் அடக்கும் ஆற்றலே இந்நூலின் தனித்துவமான பங்களிப்பு என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**திறவுச்சொற்கள்**:

நற்றிணை, சங்கஇலக்கியம், அகப்பொருள், திணை, உள்ளுறைஉவமம், மொழிநயம், பண்பாட்டுநயம், தமிழ்அழகியல், எட்டுத்தொகை

| Copyright © Author(s)

**ஆய்வு நோக்கம்:**

நற்றிணையில் இடம்பெறும் தலைவி-தலைவன் உணர்வுநிலைச் சித்தரிப்பின் இலக்கிய நயத்தைக் கண்டறிதல்.கருப்பொருள் அடிப்படையிலான இயற்கை உவமைகள் மற்றும் உள்ளுறை உவமங்கள் மூலம் வெளிப்படும் அழகியல் கூறுகளை ஆய்வு செய்தல்.ஐந்திணைச் சூழலியல் பின்னணி, பாடல்களின் உணர்வுச் செறிவுடன் எவ்வாறு கரைந்து இயைகிறது என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்கே உரிய தனித்துவமான இலக்கிய நயங்களை மற்ற தொகை நூல்களுடன் ஒப்பிட்டுநற்றிணைப் பாடல்களில் வெளிப்படும் சொல்நயம், ஓசை நயம், யாப்பு நேர்த்தி ஆகியவற்றின் அடிப்படையிலான மொழிநயத்தை ஆராய்தல்.நற்றிணைப் பாடல்களினூடே பதிவாகியுள்ள பண்டைத் தமிழர் சமூக வாழ்வியல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் பண்பாட்டு நயத்தைக் ஆராய்தல்.

**நற்றிணைஅறிமுகம்:**

எட்டுத்தொகை நூல்களைப் பட்டியலிடும் பழைய வெண்பா, "நற்றிணை நல்ல குறுந்தொகை..." என முதலில் நற்றிணையையே குறிப்பிடுகிறது. "நல்" என்னும் அடைமொழியும் "திணை" என்னும் சொல்லும் இணைந்து உருவான "நற்றிணை" என்னும் பெயரே, இந்நூலின் பாடல்கள் திணை மரபுக்கு எவ்வளவு நேர்த்தியாக அமைந்துள்ளன என்பதைச் சுட்டுகிறது. நற்றிணை நானூறு என்றும் இதனை வழங்குவர். இந்நூலைத் தொகுத்தவர் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை எனினும், தொகுப்பித்தவனாக பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி குறிப்பிடப்படுகிறார். திருமாலை வாழ்த்தும் கடவுள் வாழ்த்தோடு சேர்த்து 401 பாடல்கள் இதில் உள்ளன; அவற்றுள் பெரும்பாலானவை ஒன்பது முதல் பன்னிரண்டு அடிகள் வரையிலான ஆசிரியப்பாவால் அமைந்துள்ளன. நானூறு பாடல்களுள் 234-ஆம் பாடலும், 385-ஆம் பாடலின் ஒரு பகுதியும் கிடைக்கவில்லை. சுமார் 192 புலவர்கள் இந்நூலின் பாடல்களைப் பாடியிருப்பினும், 59 பாடல்களின் புலவர் பெயர்கள் கிடைக்கவில்லை. நற்றிணையின் ஒரு பாடலிலேயே (54) "தூது சிறை" எனும் தொடர் காணப்படுவதால், தூது செல்பவர்க்கு வழிகாட்டியாக இந்நூல் விளங்கியது எனவும் சிலர் கருதுவர். நற்றிணைப் பாடல்கள் அனைத்தும் முழுமையாக அகப்பொருள் பாடல்களே; புறப்பொருள் கலவாத ஒரே எட்டுத்தொகை நூல் என்னும் தனிச்சிறப்பும் இதற்குண்டு. இத்தகைய அமைப்புச் சிறப்புகளுக்கு அப்பால், நற்றிணையின் இலக்கிய நயம் என்பது அது கையாளும் மொழிநுட்பத்திலும், உணர்வுச் செறிவிலும், இயற்கை - திணைச் சூழலியல் இணைவிலும் தங்கியுள்ளது. இக்கட்டுரை அம்மூன்று கூறுகளையும் தனித்தனியே ஆராய்ந்து,

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.02**

நற்றிணையின் அழகியல் பங்களிப்பை மதிப்பிடும் முயற்சியாகும்.

**நற்றிணையின் அமைப்பும் வரலாற்றுப் பின்னணியும்:**

நற்றிணை தனிப்பாடல்களாகப் பல புலவர்களால் பாடப்பட்டு, பின்னர் ஒரு தொகுப்பாக இணைக்கப்பட்டது. இது கடைச்சங்க காலப் படைப்பாகக் கருதப்படுகிறது. இதன் பாடல்கள் ஆசிரியப்பா யாப்பில் அமைந்துள்ளன.குறைந்த பட்சம் 9 அடிகளையும் அதிகபட்சம் 12 அடிகளையும் கொண்டவை. இந்நூல் குறிஞ்சி, முல்லை, மருதம் , நெய்தல், பாலை என ஐந்து திணைகளை பற்றிய பாடல்களை கொண்ட நூல். அவை தோராயமாக

- குறிஞ்சி -132
- முல்லை -30
- மருதம் -32
- நெய்தல் -102
- பாலை -109 ஆகும்.

இவை

- 7அடிகளுக்கு 1 பாடல்
- 8 அடிகளுக்கு 1 பாடல்
- 9 அடிகளுக்கு 106 பாடல்கள்
- 10 அடிகளுக்கு 96 பாடல்கள்
- 11 அடிகளுக்கு 110 பாடல்கள்
- 12 அடிகளுக்கு 77 பாடல்கள்
- 13 அடிகளுக்கு 8 பாடல்கள்
- 234 மற்றும்355 பாடல்கள் கிடைக்கவில்லை.

மேலும் இந்நூலின் மூலம் அக்கால மக்களின் பழக்க சொல்லோட்டத்தில் ஒரு இயல்பான உரையாடல் தன்மையை உருவாக்குகிறது. ஒன்பது முதல் பன்னிரண்டு அடிகள் வரை மட்டுமே அமைந்திருப்பது, குறுந்தொகையின் மிகக் குறுகிய அடிவரம்பையும், அகநானூற்றின் நீண்ட அடிவரம்பையும் ஒப்பிடும்போது, நற்றிணைக்கே உரிய ஒரு நடுநிலை நீளத்தைக் காட்டுகிறது. இந்த நடுநிலை நீளம், ஒரு பாடலுக்குள் தலைவி அல்லது தலைவனின் ஒரு உணர்வுத் தருணத்தை முழுமையாக விரித்துரைக்கவும், அதே நேரத்தில் சொற்சிக்கனத்தையும் கடைப்பிடிக்க இயலும் ஒரு கலைநுட்ப வாய்ப்பை புலவர்களுக்கு அளித்திருக்கிறது.

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.02

**அகவுணர்வுச் சித்திரிப்பு நயம் :**

நற்றிணையின் மையக் கரு தலைவி-தலைவன் உறவின் பல்வேறு கட்டங்களாகும் - களவு, கற்பு, பிரிவு, ஊடல், வரவு எதிர்பார்ப்பு எனப் பல நிலைகளில் மனித உணர்வுகளின் நுட்பங்கள் சித்தரிக்கப்படுகின்றன. இச்சித்தரிப்பின் சிறப்பு, உணர்வுகளை நேரடியாகக் கூறாமல், தலைவியின் தோழிக்கூற்றாகவோ, தலைவனின் தன்னுரையாகவோ மறைமுகமாக வெளிப்படுத்துவதில் உள்ளது. பிரிவுத் துயரம் பெரும்பாலும் வெறும் அழுகையாகச் சித்தரிக்கப்படாமல், இயற்கையின் ஏதேனும் ஒரு நிகழ்வோடு (மாலைப் பொழுதின் வருகை, பறவைகளின் கூடு திரும்புதல், பூக்கள் உதிர்தல்) இணைத்துச் சொல்லப்படுவதால், துயரம் ஒரு காட்சிப்படிமமாக மனதில் நிலைத்து விடுகிறது. இத்தகைய மறைமுக உணர்வு வெளிப்பாட்டு முறையே நற்றிணையின் உளவியல் ஆழத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

குருதிவேட்கைஉருகெழுவயமான்
வலிமிகுமுன்பின்மழகளிறுபார்க்கும்
மரம்பயில்சோலைமலியப்பூழியர்
உருவத்துருவின்நாள்மேயல்ஆரும்
மாரிஎண்கின்மலைச்சுரநீளிடை
நீநயந்துவருதல்எவன்? எனப்பலபுலந்து
அழுதனைஉறையும்அம்மாஅரிவை!
பயங்கெழுபலவின்கொல்லிக்குடவரைப்
பூதம்புணர்த்தபுதிதியல்பாவை
விரிகதிர்இளவெயில்தோன்றிஅன்னநின்
ஆய்நலம்உள்ளிவரின்எமக்கு
ஏமம்ஆகும்மலைமுதல்ஆறே.

(நற்றிணை192)

இப்பாடலில் தலைவி, தலைவன் இரவு நேரத்தில் ஆபத்தான மலைவழியாகத் தன்னைச் சந்திக்க வருவதைக் கண்டு அஞ்சுகிறாள்.புலி, இளங்களிறு, கரடி, மலைச்சுரம் போன்ற இயற்கைக் காட்சிகள் தலைவியின் மனத்தில் தோன்றும் அச்சத்திற்குப் புறக்காட்சிகளாக அமைகின்றன.

**கருப்பொருள் இயற்கை உவமை நயமும் உள்ளுறை உவமமும்:**

தொல்காப்பியர் அகப்பொருள் இலக்கணத்தில் விளக்கும் முதற்பொருள் (இடம், காலம்), கருப்பொருள் (மக்கள் தொழில், விலங்கு, பறவை, மரம், பூ, நீர்நிலை முதலியன), உரிப்பொருள் (திணைக்குரிய உணர்வுநிலை) என்னும் மூவகைக் கூறுகளும் நற்றிணையில் நுட்பமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. கருப்பொருள் கூறுகள் வெறும் பின்னணி விவரிப்புகளாக நில்லாமல்,

தலைவியின் அல்லது தலைவனின் உணர்வுநிலையை மறைமுகமாகச் சுட்டும் உள்ளுறை உவமங்களாக செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நூலின் தொடக்கத்திலேயே வரும் கடவுள் வாழ்த்துப் பாடலில், "மா நிலம் சேவடி ஆக, தூ நீர் வளை நரல் பௌவம் உடுக்கை ஆக, விசும்பு மெய் ஆக" என்னும் தொடரில், அண்டப் பேரண்டத்தையே திருமாலின் திருமேனியாகக் காணும் உருவகம் இடம்பெறுகிறது; இது தனிப்பாடல்களில் இயற்கைக் காட்சிகளை மனித/தெய்விக உணர்வுநிலைகளுடன் இணைக்கும் நற்றிணையின் பொதுவான கவிதைநெறியை முன்னதாகவே அறிமுகப்படுத்துகிறது. இதே தன்மையில், காதல் பாடல்களில் மலர், மான், அருவி, மேகம் போன்ற கருப்பொருள் கூறுகள் தலைவியின் அழகையோ, தலைவியின் மனநிலையையோ மறைமுகமாக விளக்கும் உள்ளுறை உவமங்களாக மாறுகின்றன.

நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப,
அகல் வாய்ப் பைஞ்சுனைப் பயிர் கால்யாப்ப,
குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர்
நறுங் காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப,
பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்,
அரிதே, காதலர்ப் பிரிதல்—இன்று செல்
இளையர்த் தரூஉம் வாடையொடு
மயங்கு இதழ் மழைக் கண் பயந்த தூதே.

(நற்றிணை 5)

இப்பாடலில் மலை, சுனை, மழை, தாவரங்கள் போன்ற இயற்கைக் கூறுகள் அழகாக வருணிக்கப்படுகின்றன. குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளமும் குறவர் வாழ்க்கையும் இணைந்து காட்டப்படுகின்றன.

**தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட! மருட்கை உடைத்தே—
செங்கோல் கொடுங்குரல் சிறுதினை வியன்புனம்
கொய்பதம் குறுகும் காலை, எம்
மைஈர் ஓதி மாண்நலம் தொலைவே.**

**(நற்றிணை 57-ஆம் பாடல்)**

வளைந்த கொம்புகளையுடைய ஆமான் தன் கன்றுடன் வேங்கை மரத்தின் கீழ் தங்கியிருக்கிறது. அவை தூங்குகின்ற நேரத்தில், பஞ்சு போன்ற தலையையுடைய பெண் குரங்கு தன் சுற்றத்தைக் கையால் அமைதிப்படுத்தி, ஆமானின் பால் நிறைந்த மடியை அழுத்திப் பாலைப் பிழிந்து, இன்னும் பால் கறக்கும் முறையைக் கற்றுக்கொள்ளாத தன் குட்டியின் கைகளில் நிறையச் செய்கிறது.

**வான் இகுபு சொரிந்த வயங்குபெயற் கடைநாள்,**
**பாணி கொண்ட பல்கால் மெல்லுறி**
**ஞெலிகோல் கலப்பை அதளொடு சுருக்கிப்**
**பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்**
**நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்**
**தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி**
**சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்**
**புறவினதுவே — பொய்யா யாணர்,**
**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்,**
**முல்லை சான்ற கற்பின்,**
**மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே.**

**(நற்றிணை 142)**

இப்பாடலில் மழை, மழைத்துளி, முல்லைக் காடு, இடையன், ஆடுகள் ஆகிய இயற்கை மற்றும் வாழ்வியல் கூறுகள் மிக அழகாகச் சித்திரிக்கப்படுகின்றன. குறிப்பாக, மழை பெய்து கொண்டிருக்கும் காட்சியையும், மழையில் நனைந்தபடி இடையன் ஆடுகளை அழைக்கும் காட்சியையும் புலவர் கண்முன் நிறுத்துகிறார்.

**திணைச் சூழலியல் நயம்:**

நற்றிணைப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளிலும் பரவியுள்ளன. ஒவ்வொரு திணையும் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பையும், அந்நிலப்பரப்புக்குரிய தாவரம், விலங்கு, தொழில், பொழுது ஆகியவற்றையும் மட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட உரிப்பொருளையும் (குறிஞ்சி - புணர்தல், முல்லை - இருத்தல்/ஆற்றியிருத்தல், மருதம் - ஊடல், நெய்தல் - இரங்கல்/ஆற்றாமை, பாலை - பிரிவு) கொண்டுள்ளது. நற்றிணையின் நயம் என்னவெனில், இந்நிலப் பின்னணி வெறும் புவியியல் விவரிப்பாக நில்லாமல், பாடலின் உணர்வோடு ஒன்றிணைந்து வாசகனுக்கு அந்த உணர்வை நேரடியாக அனுபவிக்கச் செய்கிறது.

பாலைத் திணைப் பாடல்களில் வறண்ட நிலம், நீரற்ற வழி, சுரம் கடக்கும் தலைவனின் பயணம் ஆகியவை பிரிவின் கொடுமையை உடல்ரீதியாகவும் உணர்த்துகின்றன. குறிஞ்சித் திணைப் பாடல்களில் மலைச் சாரல், அருவி முழக்கம், வேங்கை மலர்ச்சி ஆகியவை களவொழுக்கத்தின் இயல்பான, தன்னெழுச்சியான தன்மையை எதிரொலிக்கின்றன. இவ்வாறு, திணைச் சூழலியல் என்பது நற்றிணையில் ஒரு அலங்காரக் கூறாக அல்லாமல், உணர்வுநிலையை உருவாக்கும் கட்டமைப்புக் கருவியாகவே செயல்படுகிறது.

தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட! மருட்கை உடைத்தே—
செங்கோல் கொடுங்குரல் சிறுதினை வியன்புனம்
கொய்பதம் குறுகும் காலை, எம்
மைஈர் ஓதி மாண்நலம் தொலைவே.

**(நற்றிணை 57)**

**மொழி நயம் :**

நற்றிணையின் அழகியலுக்கு அடிப்படையாக அமைவது அதன் மொழிக்கையாளுகை நேர்த்தியாகும். மிகக் குறைவான சொற்களால் ஆழமான பொருளை உணர்த்தும் சொற்சிக்கனத் திறன் ஒவ்வொரு பாடலிலும் காணப்படுகிறது; ஒரு தொகைச்சொல் அல்லது ஒரு உள்ளுறை உவமம் மூலமே முழு உணர்வையும் தொகுத்துச் சொல்லும் ஆற்றல் இதற்குச் சான்று. ஆசிரியப்பா யாப்பின் தளர்வான அசைநடை, பேச்சு மொழிக்கு நெருக்கமான ஓர் இயல்பான ஓட்டத்தைப் பாடல்களுக்கு அளிக்கிறது; இது தலைவி-தோழி உரையாடல்களை இன்னும் நெருக்கமாகவும், நம்பகத் தன்மையுடனும் வாசகனுக்கு உணர்த்துகிறது. மோனை, எதுகை போன்ற ஓசைநய அமைப்புகள் அளவுக்கு மீறாமல், பொருள் நயனத்திற்கு இடையூறு விளைவிக்காத வகையில் கையாளப்பட்டிருப்பதும் நற்றிணையின் மொழிநுட்பத்திற்குச் சான்றாகும். மேலும், பேச்சுவழக்குச் சொற்களும், குறிப்பிட்ட திணைகளுக்கே உரிய தனித் தமிழ்ச் சொற்களும் (மலைச்சொற்கள், கடல்சார் சொற்கள், வேளாண் தொழில் சொற்கள்) இயல்பாக இணைந்திருப்பது, பாடல்களுக்கு நிலவியல் மற்றும் வாழ்வியல் நம்பகத்தன்மையை வழங்குகிறது. இத்தகைய சொல்நயமும் ஓசை நயமும் இணைந்தே நற்றிணையின் மொழிநடையை ஒரு தனித்துவமான கவிதை மொழியாக உயர்த்துகின்றன.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.02**

நின்ற சொல்லர்; நீடுதோறினியர்:
என்றும் என் தோள் பிரிபறியலரே
தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை;
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி,
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமையுறுபவோ செய்பறி யலரே!
(நற்றிணை 1)

என்ற அடிகளில் தாமரை, சந்தனம், தேன் ஆகிய இயற்கைக் கூறுகளை இணைத்து தலைவனின் காதலின்**இனிமை மற்றும் உறுதியை**புலவர் வெளிப்படுத்துகிறார். தேனீ தாமரையின் தாதினையும் சந்தனத்தின் தாதினையும் கொண்டு தேனை உருவாக்குவது போல, தலைவனின் நட்பு உயர்ந்ததும் இனிமையானதுமாக இருப்பதாகக் காட்டப்படுகிறது.

**பண்பாட்டு நயம் :**

நற்றிணைப் பாடல்கள் காதல் உணர்வைச் சித்தரிப்பதோடு நில்லாமல், பண்டைத் தமிழர் வாழ்வியலின் பல அரிய பண்பாட்டுக் குறிப்புகளையும் தற்செயலாகப் பதிவு செய்துள்ளன. பல்லி கத்தும் ஓசையை வைத்துச் சகுனம் பார்க்கும் நம்பிக்கை வழக்கம், பெண்கள் விளையாடிய பந்தாட்டம் போன்ற விளையாட்டுகள், தோழியர் குழுவமைப்பு, விருந்தோம்பல் மரபு, வழிப்போக்கர்/தூதுவர் பண்பாடு போன்றவை பாடல்களினூடே இயல்பாக வெளிப்படுகின்றன. திணைக்கேற்ப மாறுபடும் தொழில் வழக்கங்கள் - குறிஞ்சியில் வேட்டையும் தினைப்புனமும், முல்லையில் ஆநிரை மேய்த்தலும், மருதத்தில் உழவும் நீர்ப்பாசனமும், நெய்தலில் மீன்பிடியும் உப்பளமும், பாலையில் வழிப்பயணமும் - அக்காலத் தமிழகத்தின் பொருளாதார அமைப்பையும் சமூக வாழ்வையும் மறைமுகமாக விளக்குகின்றன. தலைவி-தோழி உறவில் வெளிப்படும் பரஸ்பர நம்பிக்கையும், தாய்-மகள் உறவில் தென்படும் கண்காணிப்பும், ஊர் அலர் (பழிச்சொல்) குறித்த அச்சமும் அக்கால சமூக மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்றன. இவ்வாறு நற்றிணை, ஒரு காதல் இலக்கியமாக மட்டுமல்லாமல், சங்ககால தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கைகள், பொருளாதாரம், குடும்ப அமைப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ளும் ஒரு பண்பாட்டுச் சான்றாகவும் விளங்குகிறது.

“அல்லில்ஆயினும்விருந்துவரின்உவக்கும்,
முல்லைசான்றகற்பின்,

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.02**

மெல்லியற்குறுமகள்உறைவின்ஊரே."

( நற்றிணை142)

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்"என்ற அடி மிகவும் முக்கியமானது. இரவு நேரமாக இருந்தாலும் விருந்தினர் வந்தால் மகிழ்ந்து அவர்களை வரவேற்கும் தலைவியின் பண்பு இங்கு காட்டப்படுகிறது. இதன் மூலம் விருந்தோம்பல் தமிழரின் உயர்ந்த பண்பாட்டு விழுமியம் என்பதை நற்றிணை உணர்த்துகிறது.

**நற்றிணையின் தனித்துவமான இலக்கிய நயங்கள்:**

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்கே உரிய தனித்தன்மைகளில் முதன்மையானது, அது முழுமையாக அகப்பொருள் பாடல்களை மட்டுமே கொண்டிருப்பதாகும். குறுந்தொகையின் மிகச் சுருக்கமான வெளிப்பாட்டு நடையையும், அகநானூற்றின் விரிவான வருணனை நடையையும் ஒப்பிடும்போது, நற்றிணை அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு சமநிலையைப் பேணுகிறது - உணர்வுகளை முழுமையாக விரிவுபடுத்தவும், அதே சமயம் சொற்சிக்கனத்தையும் விட்டுக்கொடுக்காத ஒரு கலைநேர்த்தி இதில் காணப்படுகிறது. மேலும், நூலின் பாடல் ஒன்றில் இடம்பெறும் "தூச் சிறை" எனும் தொடரை அடிப்படையாகக் கொண்டு, நற்றிணை தூதுவழி வழிகாட்டியாகவும் பயன்பட்டிருக்கக்கூடும் என்னும் மரபுக் கருத்து, இந்நூலின் நடைமுறைப் பயன்பாட்டு நயத்தையும் சுட்டுகிறது. இத்தகைய அமைப்பு நேர்த்தியும், உணர்வு-இயற்கை இணைவும், திணை நேர்த்தியும் இணைந்தே நற்றிணையை சங்க இலக்கிய அழகியலின் குறிப்பிடத்தக்க ஒரு சான்றாக நிலைநிறுத்துகின்றன.

வான் இகுபு சொரிந்த வயங்குபெயற் கடைநாள்,
பாணி கொண்ட பல்கால் மெல்லுறி
ஞெலிகோல் கலப்பை அதளொடு சுருக்கிப்
பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்
தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்
புறவினதுவே — பொய்யா யாணர்,
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்,
முல்லை சான்ற கற்பின்,
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே.

(நற்றிணை 142)

தலைவன் தன் தேர்ப்பாகனிடம், விருந்தினர் இரவு நேரத்தில் வந்தாலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் கற்புடைய தலைவி வாழும் ஊரை விரைந்து அடைய வேண்டும்என்கிறான்.

**முடிவுரை :**

நற்றிணையின் இலக்கிய நயம் என்பது தனி ஒரு கூறில் அடங்குவதன்று; அது தலைவி-தலைவன் உணர்வுநிலைச் சித்திரிப்பின் உளவியல் நுட்பம், கருப்பொருள் அடிப்படையிலான உள்ளுறை உவமங்களின் அழகியல் ஆற்றல், ஐந்திணைச் சூழலியலின் கட்டமைப்புச் செயல்பாடு, சொல்நயமும் ஓசை நயமும் கொண்ட மொழிநுட்பம், மற்றும் பண்டைத் தமிழர் வாழ்வியலைப் பதிவுசெய்யும் பண்பாட்டுச் செறிவு ஆகிய ஐந்தின் ஒருங்கிணைவிலிருந்தே உருவாகிறது. முழுமையாக அகப்பொருள் பாடல்களை மட்டுமே கொண்ட ஒரே எட்டுத்தொகை நூலாக நற்றிணை விளங்குவதும், அதன் நடுநிலையான அடிவரம்பும் இணைந்து, இயற்கையையும் மனித உணர்வையும் பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைக்கும் ஒரு தனித்துவமான கவிதைநெறியை உருவாக்கியுள்ளன. இவ்வாய்வு, நற்றிணையின் இந்நுட்பமான இணைவையே அதன் நிலைத்த இலக்கிய நயமாக முன்வைக்கிறது.

**துணைநூல் பட்டியல்:**

1. கு. வெ. பாலசுப்பிரமணியன், *நற்றிணை – மூலமும் உரையும்*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. ச. வே. சுப்பிரமணியன், *சங்க இலக்கியம்*, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. ச. வே. சுப்பிரமணியன், *சங்க இலக்கியத்தில் இயற்கை*, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. தமிழண்ணல், *சங்க இலக்கிய ஒப்பீடு*, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
5. தமிழண்ணல், *சங்க இலக்கிய அறிமுகம்*, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
6. மு. வரதராசனார், *தமிழ் இலக்கிய வரலாறு*, சென்னை: சாகித்ய அகாதெமி.
7. மு. வரதராசனார், *இலக்கியத் திறன்*, சென்னை: பாரி நிலையம்.
8. வ. சுப. மாணிக்கம், *தமிழ்க் காதல்*, சென்னை: பாரி நிலையம்.
9. வ. சுப. மாணிக்கம், *தமிழ் இலக்கியத்தில் அகத்திணை*, சென்னை.
10. இரா. மோகன், *சங்க இலக்கியத்தில் அகத்திணை*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
11. இரா. மோகன், *தமிழ் இலக்கியத் திறனாய்வு*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
12. ந. சுப்புரெட்டியார், *சங்க இலக்கியத்தில் இயற்கை*, சென்னை: பாரி நிலையம்.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.02**

**References:** (MLA Style)

[1]. Balasubramanian, K. V. *Natrinai – Original Text and Commentary*. New Century Book House.
[2]. Manickam, Va. Sub. *Akam Thinai in Tamil Literature*. Pari Nilayam.
[3]. ---. *Tamil Love*. Pari Nilayam.
[4]. Mohan, Ira. *Akam Thinai in Sangam Literature*. New Century Book House.
[5]. ---. *Literary Criticism in Tamil Literature*. New Century Book House.
[6]. Subramanian, S. V. *Nature in Sangam Literature*. Manivasagar Pathippagam.
[7]. ---. *Sangam Literature*. Manivasagar Pathippagam.
[8]. Subbureddiyar, Na. *Nature in Sangam Literature*. Pari Nilayam.
[9]. Tamilannal. *A Comparative Study of Sangam Literature*. Meenakshi Book House.
[10]. ---. *An Introduction to Sangam Literature*. Meenakshi Book House.
[11]. Varadarasanar, Mu. *History of Tamil Literature*. Sahitya Akademi.
[12]. ---. *Literary Appreciation*. Pari Nilayam.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam